**கிரிபாவ பிரதேச சபை - 2021**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

---

**1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

---

கிரிபாவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 172(1) உப பிரிவினதும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த விடயங்களிலிருந்தான தாக்கத்தைத் தவிர்த்து நிதிக்கூற்றுக்கள் கிரிபாவ பிரதேச சபையின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

---

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இக.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு நடைமுறைகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி பிரதேச சபை உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

இயலுமான வரையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்காக விடயப்பரப்பு விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்கள் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள், வழிகாட்டிக் கோவை, பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணிச்செல்லப்படுகின்றதா எனவும்
- ஏதேனும் உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்ட பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க மன்றம் செயற்படுகின்றதா எனவும்
- தனது அதிகாரங்கள், இலக்குகள் மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும்
- வளங்கள் சிக்கனமாக, செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க பெறுகை செய்யப்பட்டுள்ளதாகவும்

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

---

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் குறிப்பிடப்பட்ட தேவைகள் தொடர்பான விசேட ஏற்பாடுகள் உள்ளடங்கியுள்ளது.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக் கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குவதாக உள்ளது.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் 6(I)(ஈ)(iv) ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களில் உள்ளடங்கியுள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) மீளாய்வாண்டில் சபைக்குச் சொந்தமான திண்மக் கழிவு முகாமைத்துவ நிலைய நிர்மாணத்திற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 4,139,957 ஆன தொகை மூலதனமாக்கப்படாமை காரணமாக நடைமுறையல்லாச் சொத்துக்கள் மற்றும் மூலதனச் சொத்துக்கு வருமானத்தில் பங்களிக்கும் கணக்கு குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | கணக்காய்வு மூலம் சுட்டிக் காட்டப்பட்ட குறைபாடுகளை ஏற்றுக் கொள்கின்றேன். | சரியாக கணக்கு வைக்கப்படல் வேண்டும் |
| (ஆ) மீளாய்வாண்டில் 4 செலவின விடயங்களில் ரூபா 1,192,494 தொகை நிதிக்கூற்றுக்களில் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (இ) மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிர்மாண கடன்பட்டோர் ரூபா 113,868,803 ஆக இருந்த போதும் அது ரூபா 111,662,280 என ரூபா 2,205,323 குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | | |
| (ஈ) சபைக்குச் சொந்தமான தளபாட உபகரணங்கள் மற்றும் இயந்திர உபகரணங்கள் ரூபா 418,736 அங்கீகாரமின்றி அகற்றப்பட்டிருந்தது. அதற்காக கணக்கீட்டில் தேவையான சீராக்கம் செய்யப்பட்டிருக்கவில்லை. | | |

### 1.6.2 இணங்காத கட்டுப்பாட்டுக் கணக்குகள் அல்லது அறிக்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் உப அட்டவணையின் பிரகாரம் காண்பிக்கப்படும் பொது கடன்கொடுத்தோர் பெறுமதி ரூபா 3,097,099 ஆக இருந்த போதும் பொதுக் கடன்கொடுத்தோர் அட்டவணையின் பிரகாரம் ரூபா 177,636 ஆக இருந்தமையால் ரூபா | நாட்குறிப்பு பதிவின் மூலம் இந்த ஆண்டின் போது குறித்த சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். | சரியாக கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். |

2,919,463 ஆன வேறுபாடு காணப்பட்டது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2021 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,966,795 ஆக இருந்ததுடன் அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,356,863 ஆக இருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### 3.1 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கிரிபாவ பஸ் நிறுத்துமிடத்தில் 04 கடைகள் நிர்மாணிக்கப் பட்டிருந்ததுடன் இக்கடைகளில் 03 பஸ் நிறுத்துமிட நிர்மாணத்தின் போது உடைத்து அகற்றப்பட்ட கடை உரிமையாளர் களுக்கு வழங்குவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும் இக்கடைகளை குத்தகைக்கு வழங்கியதாக பழைய கடை உரிமையாளர்களுடன் உடன்படிக்கை யொன்று இல்லாதிருந்ததுடன் அக்கடை உரிமையாளரின் வேண்டுகோள் கடிதத்தின் பிரகாரம் அத்துமீறி வியாபாரம் செய்வது அவதானிக்கப்பட்டது. இக்கடைகள் 3 ஆண்டுகளுக்கு 3 ஆண்டுகள் கேள்வி கோராமல் பழைய கடை உரிமையாளர்களுக்கு மீண்டும் வழங்கப்பட்டிருந்தது. நீண்டகால குத்தகை முறைமையில் வழங்கினால் விடயப்பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரத்தின் பேரில் ஒரே தடவையில் அறவிடக் கூடியதாக இருந்த போதும் அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | 03 ஆவது கடை வேறொரு நபருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுட ன் அதற்காக விடயப் பொறுப்பு அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு தவறியிருந்ததாக ஏற்றுக் கொள்கின்றேன். | சட்ட ஆலோசனையின் பிரகாரம் கடைகளை குத்தகைக்கு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3.2 ஒப்பந்த நிர்வாகத்திலுள்ள குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டின் கிராமிய வீதிகளை அபிவிருத்தி செய்யும் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சிங்கபாலய வல்வானே முதல் ஆசிய கொட்டுவ வீதி அபிவிருத்திக்காக ரூபா 2,000,000 தொகைக்கு உடன்படிக்கை செய்யப்பட்டு வேலை ஆரம்பிக்கப்பட்டிருந்தது. வீதி 2022 செப்தெம்பர் 26 ஆந் திகதி 100 மீற்றர் அளவில் பூர்த்தி செய்யப்பட்டிருந்ததுடன் பூர்த்தி செய்யப்பட்ட வீதியை பரீட்சித்த போது வீதியில் பிடிக்கப்பட்டிருந்த அச்சுக் கற்கள் கீழிரங்கியிருந்தாகவும் அச்சுக்கள் மற்றும் நிர்மாணப் பொருட்களை வீதி இரண்டு பக்கத்திலும் குவித்து வைக்கப்பட்டிருந்ததாகவும் இந்நிர்மாணத்திற்காக விவசாய அமைப்பொன்றுடன் ரூபா 2,000,000 உடன்படிக்கை செய்யப்பட்டிருந்த போதும் கிரிபாவ பிரதேச சபையின் உறுப்பினர் ஒருவர் ஒப்பந்தத்தை மேற்கொள்வதாக பௌதீக பரிசோதனையின் போது உறுதிப்படுத்தப்பட்டிருந்த துடன் தொழில்நுட்ப உத்தியோகத்தரும் சான்றுறுதிப்படுத்தியுள்ளார். | பொருட்களின் விலை மதிப்பீட்டு வீதங்களை விட அதிகரித்துச் சென்றமையாலும் பொருட்களை வழங்குவதற்கு பற்றாக்குறை இருந்தமையாலும் இச்செயற்திட்டத்தை முழுமையாக பூர்த்தி செய்ய உடன்படிக்கை நிறுவனத்தினால் நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | • உடன்படிக்கையின் பிரகாரம் செயற்திட்டத்தை பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும்.<br>• உடன்படிக்கை சங்கததின் மூலம் செயற்திட்டத்தை நிறைவேற்ற வேண்டும். |
| (ஆ) | இச்செயற்திட்டத்திற்காக முறையற்ற விலை கோரல்கள் கோரப்பட்டு பயிற்சி மற்றும் பயிற்சி பெறாத 36 பேர் பெறுகை அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டிருந்தனர். சம்பளக் கொடுப்பனவின் போது செக்ரோல் - பயன்படுத்தப்படாமல் பயிற்சி மற்றும் பயிற்சி பெறாத தொழிலாளரருக்கு ரூபா 2500 மற்றும் 1900 வீதம் ரூபா 923,200 தொகை சம்பளமாக கொடுப்பனவு செய்யப்பட்டிருந்தது. | உழைப்பை வழங்கும் நிறுவனத்தை தேடிக் கொள்வது சிரமமாக இருப்பதாலும் புதிய விலைக் கோரலுக்கு காலம் இல்லாமையாலும் கிடைத்த ஒரு விலைகோரலை 2021 திசெம்பர் 09 ஆந் திகதி நடைபெற்ற நிதிக்குழுவின் போது அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. | • உழைப்பாளி களுக்கு கொடுப்பனவு செய்யும் போது பயன்படுத்திய உள்ளகக் கட்டுப்பாட்டு முறை பலப்படுத்தப்பட வேண்டும்.<br>• ஊழியர்களை ஈடுபடுத்தும் போது வீதி தர விகிதம் HSR இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |